சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:128/2017

2023ம் ஆண்டு ஜூலை திங்கள் 26ம் நாள் பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் நாராயணன் (DW2) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

26.07.2023

நான் கூறுகின்ற உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். உயிலை பெரியகருப்பன் என்பவர் பிறப்பித்து கையெழுத்து போட்டதாக கூறியுள்ளேன், உயிலில் சே.பெரியகருப்பன் என்று கையெழுத்து போட்ட நபர் வாதியின் தந்தை பெரியகருப்பன் இல்லை என்றால் சரியல்ல. ஆள்மாறாட்டம் செய்யப்பட்டு உயிலில் கையெழுத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உயிலில் சண்முகவேல் என்று சாட்சி கையெழுத்து போட்ட நபர் உண்மையான நபர் இல்லை என்றால் சரியல்ல. நானும், ராமசாமியும் சேர்ந்து இந்த பிரதிவாதிகளுக்காக கள்ள உயில் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். உயில் ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். உயிலில் பெரியகருப்பன் ரேகை வாங்கவில்லை என்றால் அவர் கையெழுத்து போட்டார். எச்சரிக்கைக்காக கூட கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவர் நன்றாக படிக்க தெரிந்தவர் கையெழுத்து போட்டார். உயிலில் கண்ட சரத்துக்கள் உண்மையான

பெரியகருப்பனால் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. போலியான நபர்களை வைத்து உயில் எழுதப்பட்டதால் தான் சொத்துக்கள் பெரியகருப்பனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று உயில் சரத்துக்களில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. உயிலில் பெண் பிள்ளைகளுக்கு சொத்துக்கள் கொடுக்கப்படவில்லை என்றால் அவர்களுக்கு நல்லது கெட்டது செய்ததால் அவர்களுக்கு கொடுக்கவில்லை. உயிலை யார் தட்டச்சு செய்து என்றால் மந்தியோடையை சேர்ந்த ராமசாமி என்பவர் ஆகும். உயிலில் தட்டச்சு செய்தது ராமசாமி என்று துலங்காது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தட்டச்சு செய்தவர் வேண்டுமென்றே தன்னுடைய அடையாளத்தை உயிலில் தெரிவிக்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. உயில் எதற்காக பதிவு செய்யப்படவில்லை என்றால் பெரியகருப்பனால் நடக்க முடியவில்லை. உயில் எழுதிய பிறகு பெரியகருப்பன் பல முறை மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என்றால் சரிதான். உயிலில் மருத்துவர் யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பெரியகருப்பனுக்கு என்ன உடல்நலம் பாத்திக்கப்பட்டிருந்தது என்றால் கால்கை, முழங்கால் வலியில் இருந்தார். என்ன வியாதிக்கு மருத்துவம் பார்த்தார் என்றால் கால்கை, முழங்கால் வலிக்கு வீட்டிலிருந்து மருத்துவம் பார்த்தார். மருத்துவமனைக்கு சென்று மருத்துவம் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. ஒவ்வொரு ஆண்மக்களுக்கும் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் தனிதனியாக பட்டியல் இட்டு காட்டப்படவில்லை என்றால் இருப்பதை பிரித்து கொள்ளும்படி காட்டப்பட்டுள்ளது. பெண்மக்களின் கணவர் பெயர் உயிலில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பெண்மக்கள் எந்த ஊரில் வசிக்கிறார்கள் என்று உயிலில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உண்மையான பெரிகருப்பன் உயிலை ஏற்படுத்தாத காரணத்தினால் தான் அந்த உயிலில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதுவதற்கு முன்பு வேறு ஆவணங்கள் கைவசம் எதாவது இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. உண்மையான பெரிகருப்பன் எழுதி வைக்காத

காரணத்தினால் தான் எனக்கு விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. பெரியகருப்பன் எழுதி வைத்த பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள கையெழுத்தை பார்த்து போலியான மோசடியாக பி.வா.சா.ஆ 1 தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு போட்ட பிறகு தான் பி.வா.சா.ஆ 1 தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வேண்டியவர் என்பதால் நான் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகளை பிரதிவாதி கிருஷ்ணன் மகனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர் எனக்கு பங்காளி ஆகும்.

மறுவிசாரணை இல்லை.